# DEPOSITION OF WITNESS
In the Court of District Munsif Cum Judicial Magistrate Court,Uthukottai.

C.C. No. 9 of 2019

Prosecution witness : LW- 8 / PW - 6

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | நியாஸ் | Taluk | : | |
| Father's Name | : | டி.ரமேஷ் | Calling | : | |
| Village | : | செங்கரை | Age | : | 25 |

( Accused Called absent petition filed and allowed. )

solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.11.2023

**முதல் விசாரணை நேரம் மாலை 3.30**

1. நான் தரப்பரிசோதனை ஆய்வாளராக தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன்.

2. கடந்த 2016 ம் வருடம் டிசம்பர் மாதம் 20 ம் தேதி காலை 10.00 மணியளவில் சம்பவம் நடைபெற்றதாக நினைவில் உள்ளது.

3. நான் தாமதமாக விபத்து நடந்த இடத்திற்கு வந்தேன். பிறகு காவல்துறை மற்றும் மருத்துவதுவரை சார்ந்த நபர்கள் அவர்களது பணியினை செய்துக்கொண்டிருந்தார்கள்.

4. அன்று பாதிப்பு உற்றவர்களும் பாதிப்பு ஏற்படுத்திய இருதரப்பினரின் உறவினரும் பரபரப்பு நிலையில் இருந்தனர்.

5. விபத்து நடந்த அடுத்த நாள் கடந்த 2016 ம் வருடம் டிசம்பர் மாதம் 21 ம் தேதி காவல்துறையை சேர்ந்த அதிகாரி சோதனையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள். அங்கு நான் சென்றுக்கொண்டிருந்தபோது அவர்களிடம் விசாரித்தேன் இங்கு சோதனை நடைபெறுவதாக என்னிடம் கூறினார்கள் அதை நான் பார்த்தேன் அதன்பிறகு சாட்சி தேவை என்று கூறினார்கள். சோதனையை கண்ட நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன்.என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் இரண்டாவது ஆக உள்ள கையொப்பம் என்னுடையது தான் அந்த பார்வை மகசர் அசாஆ1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிதரப்பின் குறுக்கு விசாரணை</u>**

1. கார்த்திக்ராஜா என்பவரை தெரியுமா என்றால் அவர் எனது உறவினர்.

2. கார்த்திக்ராஜா என்பவர் எனது சித்தப்பா மகன் என்றால் சரிதான். சதீஷ் என்பவர் எனது அத்தை மகன் என்றால் சரிதான்.

3. இவ்விபத்து சம்பவம் 20ம் தேதி நடைபெறவில்லை 21ம் தேதி தான் நடைபெற்றது என்று சொன்னால் இந்த கருத்தை நான் மறுக்கின்றேன்.

4. நான் எனது சாட்சியத்தில் மருத்துவர் மருத்துவ பணியையும் காவலர் அவரது பணியையும் செய்துக்கொண்டிருந்தார்கள் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். எந்த மருத்துவமனையில் இருந்து மருத்துவர் வந்து அவரது பணியை செய்துக்கொண்டிருந்தார் என்று கூறமுடியுமா என்றால் முடியாது அங்கு இருந்த மற்ற பார்வையாளரை போல் நானும் பார்த்துக்கொண்டிருந்தேன் ஊத்துக்கோட்டை மருத்துவமனையில் இருந்து மருத்துவம் பார்த்ததாக நான் நினைக்கிறேன்.

5. என்னுடைய கருத்துபடி அடிப்பட்ட மறுநாள் தான் மருத்துவர்கள் மருத்துவமனையில் பரிசோதனை செய்தார்கள் என்றால் அடிப்பட்ட அன்று தான் மருத்துவம் பார்த்தார்கள் அடுத்த நாள் எப்படி மருத்துவம் பார்க்கமுடியும்.

6. சம்பவம் இடத்தில் ' பாதிக்கப்பட்ட நபர்களுக்கு மருத்துவர் சிகிச்சை அளித்தார்களா என்றால் சம்பவஇடத்தில் மருத்துவர்கள் வரவில்லை சம்பவ இடத்திலிருந்த வந்த ஆம்புலன்ஸ் நபர்கள் அவர்களுக்குண்டான நடைமுறையை செய்தார்கள்.

7. சம்பவம் நடைபெற்றது 21ம் தேதிதான் நான் இந்நீதிமன்றத்தில் 20ம் தேதி நடந்ததாக பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் நான் ஏற்கனவே நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேன்.

8. என்னிடம் வெறும் வெள்ளைத்தாளில் கையொப்பம் வாங்கினார்களா என்றால் இல்லை தட்டச்சு செய்யப்பட்ட தாளில் கையொப்பம் செய்தேன் கையொப்பம் பெறப்படும்போது யார் முன்னிலையில் செய்தீர் என்றால் காவல் துறை சேர்ந்தவர்கள் முன்னிலையில் கையொப்பம் செய்தேன். சம்பவம் நடைபெற்ற 7 ஆண்டுகள் ஆகுவதால் என்னால் குறிப்பிட்டு பதில் அளிக்கமுடியவில்லை.

9. என்னிடம் வாக்குமூலம் வாங்கும்போதே கையொப்பம் வாங்கினார்களா அல்லது வாக்குமூலம் வாங்கிய பின்பு கையொப்பம் வாங்கினார்களா என்றால் வாக்குமூலம் வாங்கப்பட்டு அதன்பின்பு தட்டச்சு செய்யப்பட்டு என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள்.

10. அதன் பின்பு வாங்கிய கையொப்பம் காவல் நிலையத்தில் வாங்கப்பட்டதா அல்லது சம்பவஇடத்தில் வாங்கப்பட்டதா என்றால் சம்பவஇடத்தில் தான் வாங்கினார்கள்.

11. என்னுடன் மற்ற நபர்கள் யாராவது கையொப்பம் ̇செய்தார்களா என்றால் ஏழுமலை என்பவா் சாட்சியத்திற்கு வந்ததாக ஞபாகம் இருக்கிறது. அந்த ஏழுமலை என்பவா் யாா் என்றால் செங்கரைக்கு வடமேற்கே உள்ள புதிய காலனியை சோ்ந்த நபா்.

12. சம்பவமே நடைபெறாதா ஒரு நாளில் சம்பவம் நடைபெற்றதாகவும் சாட்சியமே பதிவுசெய்யப்படாத நாளில் சாட்சியம் பதிவுசெய்யப்பட்டதா நான் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றோம் என்றால் ஏற்கனவே இதுகுறித்து நான் சாட்சியம் அளித்துள்ளேன்.

13. விபத்தில் காயமுற்ற நபா்கள் எனது உறவினா்கள் என்பதால் தவறான சங்கதிகளை கொண்டு சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் ஊா்காரா்கள் இருந்தாலும் உறவினா்களாக இருந்தாலும் பாதிப்பு பாதிப்பு தான்.

14. சம்பவத்தை நான் நேரில் பாா்க்காமல் யாரோ சொல்லிய சங்கதிகளை கொண்டு நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சம்பவத்தை நான் நேரடியாக பாா்க்கவில்லை என்று எனது முதன்மை சாட்சியத்திலும் கூறியுள்ளேன் நான் விபத்து நடந்து சிறிது நேரம் தாமதமாக வந்துள்ளேன் என்றும் கூறியுள்ளேன்.

**மறுவிசாரணை இல்லை**

**சாட்சியம் முடிவுற்ற நேரம் மாலை 3.55**